# உண்மை இறைவிசுவாசியின் அடையாளம்

மாணவன் ஸீ. எம். சபீக் (ஆண்டு - 02)

ஒரு முஸ்லிமின் மிகச்சிறந்த நற்குணங்களுள் மிகவும் உயர்வானது உண்மையாகும். இம்மகத்தான மார்க்கம் எதன் பக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதே அம்முக்கிய அடையாளங்களுள் ஒரு அடையாளமாகும். எனவே இம்மார்க்கம் உண்மையின் மீதே நிறுவப்பட்டுள்ளது. மக்காவில் நபி (ஸல்) அவர்கள் வசித்த போது அவரை குறைசிக்காபிர்கள் உண்மையாளர், நம்பிக்கையாளர் என்று அழைத்தார்கள் காரணம் அவர் மக்களிடம் உண்மையாளராகவும், நம்பிக்கையாளருமாக இருந்தார்.

நாங்கள் செய்யும் ஒவ்வொரு விடயங்களுக்கும் உண்மை அவசியமாக இருக்கின்றது. இன்னும் வணக்கத்தில் கூட உண்மை தேவைப்படுகிறது. அதில் உண்மை இல்லை என்று இருந்தால் அந்த வணக்கம் நிறைவேறாது. என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இன்னும் விசுவாசிகளான நாங்கள் பொய்யர்களோடும் நயவஞ்சகர்களோடும் இருக்கக்கூடாது. மாறாக நாம் உண்மையாளர்களுடன் தான் இருக்க வேண்டும். இன்னும் உண்மையாளர்கள் விசுவாசிகள் இருக்க வேண்டும் என்பதை அல்லாஹு"தஆலா அவனுடைய திருமறையில் கூறுகிறான். **"விசுவாசிகளே அல்லாஹ்விற்கு பயப்படுங்கள் மேலும் உண்மையாளர்களுடன் நீங்களும் ஆகிவிடுங்கள்.** (அத்தவ்பா 9 : 119)

மேலும் அல்லாஹு"தஆலா அவன் ஒரு உண்மையாளன் என்பதை அவனுடைய திருமறையில் வர்ணித்துக் கூறுகிறான். **"வார்த்தையில் அல்லாஹ்வை விட மிக உண்மையாளன் யார்?"** (அந்நிஸா 4 : 87)

இன்னுமொரு ஆயத்தில் இவ்வாறு கூறுகின்றான். **"சொல்லால் அல்லாஹ்வை விட உண்மையாளன் யார்"?** (அந்நிஸா 4 : 122)

மேலும் அல்லாஹு"தஆலா நபி (ஸல்) அவர்களைப் பார்த்து **"நபியே! நீர் கூறும் அல்லாஹ் உண்மையையே கூறுகின்றான். எனவே நீங்கள் நேர்வழி சென்ற இப்றாஹீமின் மார்க்கத்தை பின்பற்றுங்கள்"** என்று கூறுகின்றான் (ஆல இம்ரான் 3 : 95)

மேலும் அல்லாஹ்வுடன் உண்மை உள்ளவர்களாக நாம் நடந்தால் சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்தரியக்கூடிய ஆற்றலை அல்லாஹ் நமக்குத் தருவான். உமர் பின் கத்தாப் (ரலி அவர்கள் கூறினார்கள். "நிச்சயமாக உண்மையும் நன்மையும் சுவர்க்கத்திற்குரியதன்று. பொய்யும், தீமையும் நரகத்திற்குரியவை". இந்த மகத்தான உண்மை பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். "எவரிடத்தில் நான்கு பண்புகள் காணப்படுகின்றதோ அவர் வெற்றியடைந்துவிட்டார். அவை உண்மை, நாணம், நற்குணம், நன்றி செலுத்துதல் ஆகும்.

நிச்சயமாக உண்மைக்கு மகத்தான பல பயன்கள் உள்ளன. அவற்றை ஒரு உண்மையாளன் அவனது உண்மையைக் கொண்டு அறிந்துகொள்வான். இந்த அழகான குணத்தின் மூலம் ஈருலகிலும் அவன் மகிழ்ச்சியடைகிறான். மனிதர்களை அல்லாஹு"த்தஆலா உண்மையாளர்கள், நயவஞ்சகர்கள் என்று பிரித்துள்ளான். இதைப்பற்றி கூறும் போது கூறுகின்றான். **"உண்மையாளர்களுக்கு அவர்களின் உண்மைக்குரிய கூலியை திடனாக அல்லாஹ் அளிப்பான். அவன் நாடினால் நயவஞ்சகர்களை வேதனை செய்வான் அல்லது அவர்களை மன்னிப்பான்".** (அல்-அஹ்ஸாப் 33 : 24)

உண்மை நன்மையின் பாலும் சிறந்த முடிவின் பாலும் இட்டுச் செல்லு என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதைத்தான் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். **"ஒரு காரியம் உறுதியாக அல்லாஹ்வுக்கு அவர்கள் உண்மையாக நடந்துகொண்டால் அதுவே அவர்களுக்கு நன்மையாக இருக்கும்"**

(முஹம்மத் 47 : 12

மேலும் மேலே காட்டப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு சிந்தித்துப் பார்க்ககையில் உண்மை பேசுவதனால் நாங்கள் சுவர்க்கம் நுழைய முடியும். இன்னு நாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் பொய்யின் வாடையைக் கூட நுகரக் கூடாது என்பதில் கவனமாக இருந்து நுழைவோமாக.

## එක්වනු සොයුරනි නොවේ ද දින

| | |
|---|---|
| සත් මග පෙන්වන නන්දන | පිනවන |
| නෙත් මිණි පාදන යහමග | පෙන්වන |
| සිප් සෙත සාදන නැණගුණ | වඩවන |
| විදුහල අපගේ ලක්බර | වැජඹෙන |
| | |
| ඉඩිනු අබ්බාස් විදුහල වෙත | එන |
| දරුවන් සැමටම සුව සෙත බෙද | මින |
| නැණවත් ගුණවත් ගුරුවිය සැම | දෙන |
| ශිල්පය බෙදති නීති ලෙස යස | සිත |
| | |
| කුරානේ හදීසය මුල්කර | දනමන |
| පිනවා ශිර්කය දුරලා | නිතිදින |
| ලබනා දැණුමට සිසු කැළ | අදරින |
| පෙරටම යාමට අල්ලාහ් | පිහිටවෙන |
| | |
| එක් වී සොයුරනි නොබෙද | දින දින |
| නගනට ඉස්ලාම් කාහල නද | දෙන |
| පින්බර අප විදුහල නැගැමට අත | දෙන |
| හැඟුමෙන් පෙරටම රොක් වී එනු | මැන |

**බලපිටියේ ලතීෆ්**